

Arimaa Nokku

16: 3 அக்டோபர் 2022

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்
INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்
**UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL**

ISSN 2320-4842

அரிமா நோக்கு
16 : 3 அக்டோபர் 2022

ஆன்னி ஏனோ
- வ. ஜெயதேவன் 03
பாரதியார் கவிதைகளில் காற்று
- கு. முதற்பாவலர் 05
சிலப்பதிகாரத்தில் ஊழ்வினை
- அ. ஸ்ரீதேவி 09
பதினெண் கீழ்க்கணக்கு:
ஃறொடை வெண்பாக்கள்
- ப. திருஞானசம்பந்தம் 12
கலிங்கத்துப் பரணியில் வீரவியல் கோட்பாடுகள்
- சி. கல்பனா 19
ஓரில் பிச்சையார் பாடலும் குறுந்தொகை உரைகளும்: ஓர் ஆய்வுப் பார்வை
- ஞா. தியாகராஜன் 23
ஆசாரக்கோவையும் நின்று அமர்ந்து வழிபடு முறையும்
- ஆர். முத்துராஜன் 28
தொன்மங்களில் அரவான்
- இ. ஜெயஸ்ரீ 33
தேனீ வளர்ப்புமுறை (பெருக்கைப்பதி)
- சு. இராமதிலகம் 36
பாரதியின் புத்தாக்கம்: கண்ணன் பாட்டு
- ந. இளங்கோ 39
தமிழ்மொழியும் கொரிய மொழியும்: ஒப்பாய்வுகளும் முடிவுகளும்
- கு. சிதம்பரம் 42
தமிழர் பண்பாட்டில் நெல்
- த. தனஞ்செயன் 47
பெரியாரின் கலைநயம்
- பா. கவிதா 51
தொல்காப்பியம், அகநானூறு ஆகியவற்றில் பொருளின் முக்கியத்துவம்
- ந. மாலதி & அ. கோவிந்தராஜன் 54
சூர்யகாந்தனின் 'முள்மலர் வேலி' நாவல் காட்டும் உழவர்களின் வாழ்வியல்
- ம. கவிதா 63
Ethical perspectives in Bernhard Schlink's The Reader
- R. Kumaran 66
பெண்ணியத் திறனாய்வு நோக்கில் திருமுருகாற்றுப்படைப் பெண்கள்
- தி. சுமதி 69

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## சிந்தனை அகராதிகள் சில

அகராதிகள் மனித வாழ்வும் அறிவு விரிவும் கிளைகள் பல்கி வளர் வதற்கேற்ப வளர்ந்துகொண்டே இருக்கும். வளம் பெருகி வாழும் மொழி யில் இலக்கியங்கள், இலக்கணங்கள் இருப்பதுபோலவே அகராதிகளும் உருவாகிவரும். இலக்கிய இலக்கணங்களைக் கடந்து அகராதி அறிவி யல், பொருளியல், அரசியல், மெய்யியல் என எண்ணற்ற துறைகள் சார்ந்து வரும், வளரும். சிந்தனைகள் இல்லாமல் மேற்குறிப்பிட்ட எவ்வியலும் இயலபுநிலையிலோ இயங்குநிலையிலோ உருவெடுக்க முடியாது என்று நாம் சொல்லும்போது, மனித வாழ்வில்லாத வெற் றிடம் எதனையும் கருக்கொள்ள வாயப்பே இல்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். உண்மையிற் சொல்லப்போனால் அகராதிகள் குறித்த அகராதிகள் ஒவ்வொரு மொழியிலும் உருவாகும் காலத்தில், நாம் வாழ்கிறோம்.

மார்க்சியச் சிந்தனை அகராதி, ஃபாண்ட்டேனா நவீனச் சிந்தனை அகராதி, உலகச் சிந்தனை அகராதி போன்றவை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. இவற்றில் மார்க்சியச் சிந்தனை அகராதி பெருந் துணை புரிந்தபோதும் அதை உருவாக்கிய முறைமைபற்றி எந்தக் குறிப்பும் நூலில் இல்லை.

ஃபாண்ட்டேனா நவீனச் சிந்தனை அகராதி என்ற நூல் சில குறிப்புகளை முன்னுரையில் தருகிறது. நவீன என்னும் அடைமொழி 20ஆம்நூற்றாண்டைக் குறிப்பதாக அமைகிறது. பொதுநிலை அகராதிக் கும் கலைக்களஞ்சியத்துக்கும் இடைப்பட்ட தன்மை கொண்டது. ஐரோப்பிய அமெரிக்க வாசகர்களை மனம் கொண்டு உருவாக்கப் பட்டது. 4000 இன்றியமையாத் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து விளக்கம் கொடுப்பது. ஒவ்வொன்றும் 10 முதல் ஆயிரம் வரை யிலான சொற்களைக் கொண்டு எழுதப்பட்டு அமைந்த நூல் இது. மூன்று இலக்கம் சொற்களில் திட்டமிட்டு நான்கு இலக்கம் சொற்களில் வெளியிடப்பட்டுள்ளது; வெளிவந்த ஆண்டு 1977.

இன்னொரு தலை சிறந்த சிந்தனை அகராதி 1969இல் வெளியிடப் பட்ட உலகச் சிந்தனை அகராதி. ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு நேரத்திற்குமான மேற்கோள் கலைக்களஞ்சியம் என்னும் சிறப்புக் குறிப்போடு இது வெளிவந்துள்ளது. ஜான் பிராட்லி, லியோ எப். தானியல்ஸ், தாமஸ் சி.ஜோன்ஸ் என்னும் மூவரால் தொகுக்கப்பட்ட பெரும்பயன் தரும் பேரகராதி இது. தொல்காலத்திய, மத்திய காலத் திய, நவீன, நடப்புக்காலத்திய சிந்தனைகள் என்றும் ஆக்க முத்தி ரையை அள்ளிக்கொண்டு வந்துள்ளது இந்நூல். வாசகருக்கு, உலகத் தன்மை மணம் வீசுவதாக, இன்று வரையிலாகப் பார்வை செலுத்தித் தொகுக்கப்பட்டதான, மேற்கோள்களின் பெருந்தொகுப்பான இந்நூலை உருவாக்கியுள்ளதாக இதன் முன்னுரை குறிப்பிடுகிறது. 20,000 மேற்கோள்கள், மாணிக்கக் கோவையாக, வைர அட்டிகையாக, பவள மாலையாக மின்னிக்கொண்டிருக்கின்றன.